# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,569 — 1965 නොවැම්බර් 26 වැනි සිකුරාදා—1965.11.26

14,569 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யுவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. | 177 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நாணவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### முல்லேரியாவ பட்டின சபை

#### பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டம்

(176 ஆம் அத்தியாயமான) பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 1965 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 27 ந் உ.

**விதி**

(176ஆம் அத்தியாயமான) பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1943, ஏப்பிறல் 9 இன் 9,108 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரமான விதியால் கடைசியாகத் திருத்தப்பட்ட படியான 1919, ஏப்பிறல் 4இன் 7,004 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதிகள், முல்லேரியாவ பட்டின சபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளிருக்கும் பிரதேசத்துக்கு அந்த விதிகள் சம்பந்தப் படுமளவுக்கு, அவற்றின் விதி அ3 இல் குறித்துள்ள கட்டணங்களின் அளவுத்திட்டத்துக்குப் பதிலாக கீழ்க்காணும் புதிய அளவுத்திட்டத்தை இட்டு, இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

| | நாள் ஒன்றுக்கு | மாதம் ஒன்றுக்கு | (டிசம்பர் 31 இல் முடியும்) வருடம் ஒன்றுக்கும் |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ ச. |
| ஆசன இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 199க்கு மேற்படாவிட்டால் .. | 3 0 .. | 35 0 .. | 100 0 |
| ஆசன இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 199க்கு மேற்பட்டு, 399க்கு மேற்படாவிட்டால் .. | 5 0 .. | 50 0 .. | 200 0 |
| ஆசன இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 399க்கு மேற்பட்டால் .. | 10 0 .. | 100 0 .. | 300 0 |

11–1206—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

---

### கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டம்

#### 13 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 இன் 60 ஆம் இலக்க கிராமச் சங்கங்கள் (திருத்தம்) அதிகார சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பலத்தைக்கொண்டு வட பிரதேச உள்ளூராட்சி உதவி அதிகாரி சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்து முள்ளிப்பற்றுக் கிராமச் சங்கத்தின் 8ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. சின்னத்தம்பி நாகரெத்தினம், அவருடைய தெரிவின் பின்னர் சங்கத்துக்கு அறிவிக்காமல் சங்கத்தின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதை நிச்சயமாய் அறிந்து, யாழ்ப்பாண மாவட்டத்து முள்ளிப்பற்றுக் கிராமச் சங்கத்தின் 8ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. சின்னத்தம்பி நாகரெத்தினம் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து உத்தியோகத்தை விட்டு நீங்கியுள்ளாரென்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி
வட பிரதேசம் (மேல்).

உள்ளூராட்சிக் கந்தோர்,
வட பிரதேசம் (மேல்),
அரசாங்கச் செயலகம்.
யாழ்ப்பாணம், 1965 ம் ஆண்டு கார்த்திகை மீ 12 ந் உ.

11–1165—26.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,569

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேபபர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.